பக்கங்கள்: 10

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 29 சனிக்கிழமை 14.12.2024 கதிர் 037

## இனி இது ரகசியம் அல்ல!

இலங்கையில் காசு கொடுத்தும் கௌரவ கலாநிதிப் பட்டம் வாங்கலாம் என்கிற நிலை இருக்கையில் ஒரு கலாநிதிப் பட்டத்தால் சபாநாயகர் பதவியை இழந்துள்ளார். தன்னுடைய கலாநிதிப் பட்டத்தை நிரூபிப்பதற்கான ஆவணங்களை உடனடியாகத் ☞ 2

# இந்தியாவிற்கு நாளை புறப்படுகின்றார் அநுர

## டில்லியில் மோடியுடன் முக்கிய பேச்சு

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் பயணமாக நாளை இந்தியா புறப்படுகிறார். டிசெம்பர் 17 வரை அவர் அங்கு தங்கியிருப்பார்.

2024 செப்டெம்பர் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் ஜனாதிபதி இந்தியாவிற்கு மேற்கொள்ளும் இந்த இருதரப்புப் பயணம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் இந்தியாவின் தலையீட்டை



எதிர்த்து உருவாகிய ஜேவிபியின் ☞ 2

## பங்குச் சந்தை திடீர் வளர்ச்சி

கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 169.53 புள்ளிகள் அதிகரித்துள்ளதாக கொழும்பு பங்குச் சந்தை தெரிவித்துள்ளது.

கொழும்புப் பங்கு சந்தையின் அனைத்து பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 14,205.34 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது.

மேலும், இன்றைய வர்த்தக நாள் நிறைவில் பங்குச் சந்தையின் ☞ 8

## பொலிஸ் அதிகாரிக்கு டிசெ. 20 வரை மறியல்

கைது செய்யப்பட்ட கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் முன்னாள் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வாவை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க இரத்தினபுரி நீதவான் சமன் டி. கே. பரனலியனகே நேற்று உத்தரவிட்டார்.

வர்த்தகரைக் கடத்தி, மிரட்டி 14 கோடி ரூபா பெறுமதியான இரத்தினக்கற்கள் மற்றும் வாகனங்கள் உள்ளிட்ட ☞ 8

## இந்திய தூதர் நேற்று பிரதமருடன் சந்திப்பு

இலங்கைக்கான இந்திய உயர்ஆணையர் சந்தோஷ் ஜா அவர்கள், இலங்கை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை நேற்று பிரதமர் அலுவலகத்தில் சந்தித்தார். இந்த சந்திப்பு இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவு மற்றும் மூலோபாய கூட்டாண்மையை குறித்ததாக இந்தச் சந்திப்பு அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது பல்வேறு ☞ 8



## எலிக்காய்ச்சல் விழிப்புணர்வு வடமராட்சியில் நேற்று தீவிரம்

வடமராட்சியில் எலிக்காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. யாழ். மாவட்டத்தில் வடமராட்சிப் பிரதேசத்திலேயே எலிக் காய்ச்சல் அதிகமாகப் பரவி வருவதாகச் சந்தேகிக்கப்படும் நிலையில் இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது சுகாதார பரிசோதகர்களால் எலிக்காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் தீவிரமாக ☞ 8

## எலிக் காய்ச்சல் தொற்றுத் தொடர்பில் மக்கள் அதிகம் பதற்றப்படவேண்டாம்

### போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடக்கில் எலிக் காய்ச்சல் தொடர்பாக உயிரிழந்தார்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களில் ஒருவர் மட்டுமே லெப்டோஸ்பைரோசிஸ் எனப்படும் எலிக் காய்ச்சலால் உயிரிழந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாருக்காவது இந்த நோய் தாக்கினால் அவர்களுக்குப் மருத்துவ சிகிச்சைகளை வழங்குவதற்கான போதிய வசதிகள் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றன. அதனால் மக்கள் இது குறித்து அதிகம் பதற்றமடையத் தேவையில்லை என்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைப் ☞ 8

## மேலும் பல எம்.பிக்களினது கல்வித் தகுதி மீதும் சந்தேகம்

சபாநாயகர் அசோக சப்புமல் ரன்வல மாத்திரமின்றி பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி, நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக, மின்சக்தி அமைச்சர் புண்ணிய ஸ்ரீ குமார ஜயக்கொடி, ஹர்ஷண சூரியப்பெரும, அனில் கயந்த, பிமல் ரத்நாயக்க மற்றும் எரங்க குணசேகர உள்ளிட்டோரது கல்வி தகைமைகள் பட்டங்கள் உண்மையானவையாய என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாம் சி தொலவத்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முந்தைய நாடாளுமன்றத்தில் சாதாரண தரத்தில்கூட சித்தி பெறாதவர்கள் இருந்தபோதிலும், அவர்கள் அதனை மறைக்கவில்லை. தமது கல்வித்தகைமைகள் தொடர்பில் மக்களிடம் பொய் கூறவில்லை.

நாடாளுமன்றத்தின் இறையான்மையைக் கேள்விக்குள்ளாக்கும் வகையில், பதவி விலகிய சபாநாயகர் இல்லாத கலாநிதிப் பட்டத்தை இருப்பதாகக் கூறி மக்களை ஏமாற்றியிருக்கின்றார்.

சபாநாயகர் மாத்திரமின்றி இவ்வாறு மக்களை மேலும் பலர் ஏமாற்றியிருக்கின்றனர். பிரதி சபாநாயகர் ரிஷ்வி சாலி தன்னை விசேட வைத்திய நிபுணர் எனக் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் அவர் சாதாரண மருத்துவர் ☞ 8

## முழு நாட்டுக்குமே ஆளும்தரப்பு நம்பிக்கைத் துரோகம் செய்தது

### ஐக்கிய மக்கள் சக்தி கண்டனம்

முழுநாட்டுக்கும் இந்த ஆளும்தரப்பு நம்பிக்கைத் துரோகம் இழைத்திருக்கிறது. அதற்கமைய மக்களுக்காக நாம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

☞ 8

## பிணைமுறி மறுசீரமைப்பு வெற்றிகரமாக நிறைவு

சர்வதேச கடன் பத்திரங்களின் (பிணை முறி) மறுசீரமைப்பை இலங்கை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

சமீபத்திய வரலாற்றில் மிகவும் சிக்கலான மற்றும் சவாலான இறையாண்மைக் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்ததாக அவர் தனது 'எக்ஸ்' தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார். இதனை நிதியமைச்சும் அதிகாரபூர்வ அறிக்கை ஒன்றின் மூலம் ☞ 8

### 2024இல் மட்டும்

## வேலை வாய்ப்புகளுக்காக 3 லட்சம் பேர் புலம்பெயர்வு

2024 ஜனவரி -முதலாம் திகதியிலிருந்து நவம்பர் 13 வரை 300,162 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

அவர்களில் 177,804 ஆண்களும் 122,358 பெண்களும் ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்த ஆட்சியில்தான் வடமாகாணம் பெரும் அபிவிருத்தி காண வாய்ப்பு

## திட்டங்களைத் தயாரிக்கக் கோருகிறார் ஆளுநர்

தேசியமக்கள்சக்தியின்ஆட்சிக்காலத்தில் வடக்கில் மிகப்பெரிய அபிவிருத்தியை முன்னெடுக்க வாய்ப்புள்ளது என்று வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்துக்கான நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. அங்கு தலைமையுரை ஆற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டத்தின் ஆரம்பத்தில் அறிமுகவுரை நிகழ்த்திய ஆளுநர், தற்போதைய அரசாங்கத்தின் காலத்தில் வடக்கு மாகாணத்தில் மிகப்பெரிய அபிவிருத்தியை முன்னெடுக்க வாய்ப்புள்ளது. எனவே மாகாணத்தில் மிகப்பெரிய நிதி ஒதுக்கீட்டில் முன்னெடுக்கவேண்டிய திட்டங்களை விரைந்து திணைக்களங்கள் தயாரிக்கவேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கியின் ஆகியனவற்றின் ஆலோசகராக இருந்த ஜீவா பெருமாள்பிள்ளை அவ்வாறான திட்டங்களைத்தயாரிப்பதற்குஉதவுவதற்காக வந்திருக்கிறார் – என்றார்.

வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், திணைக்களங்களின் பணிப்பாளர்கள்,திணைக்களத்தலைவர்கள் வடக்கு மாகாண அபிவிருத்திக்கான திட்டமுன்மொழிவுகளைக் கூட்டத்தில் முன்வைத்தனர்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர், பாடசாலை வகுப்பறைகளின் விரிவாக்கம், தளபாடங்கள் என்பன உட்பட தமது தேவைகளை முன்வைத்தார். உள்ளூராட்சிஅமைச்சின்செயலர்,ஒவ்வொரு பிரதேச சபையில் ஒரு நூலகத்தை தெரிவு செய்து கணினி கற்கை வசதிகளுடன் மேம்படுத்துவது தொடர்பான திட்டத்தை முன்மொழிந்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணத்துக்கான பணிப்பாளர், நெடுந்தீவு,குறிகாட்டுவான்துறைமுகங்களின் அபிவிருத்தி, ஊர்காவற்றுறை – காரைநகர் பாலம், வல்லை, கோப்பாய் மற்றும் வண்ணாத்திப் பாலம் என்பவற்றை அமைப்பதுஉள்ளிட்டமுன்மொழிவுகளையும், சங்குப்பிட்டிப் பாலத்தை சீரமைப்பது தொடர்பான முன்மொழிவுகளையும் தெரிவித்தார்.

வீதி அபிவிருத்தித் திணைக்களமும் தமது ஆளுகைக்கு உட்பட்ட வீதிகளின் மறுசீரமைப்பு,பாலங்கள்,துறைமுகங்களின் மறுசீரமைப்புக்கான யோசனைகளை முன்வைத்தது.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்,ஒவ்வொருமாவட்டத்துக்கும் திண்மக் கழிவுகளை எரியூட்டுவதற்கான எரியூட்டியின்தேவைப்பாட்;டைமுன்வைத்தார். அத்துடன் தீயணைப்பு வாகனத்தின் தேவைப்பாட்டையும் குறிப்பிட்டார்.

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர், வடக்கு மாகாணத்திலுள்ள ஆடுகள் மற்றும் மாடுகளை மேம்படுத்துவது தொடர்பான முன்மொழிவை முன்வைத்தார்.

நீர்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர்,பாலியாறுதிட்டம்,யாழ்ப்பாணத்துக்கான ஆறு திட்டம் என்பன உள்ளிட்ட 4 பிரதான திட்டங்களின் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தார்.

விவசாயத்திணைக்களத்தால்விவசாய உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தலுக்கான கோரிக்கை திணைக்களப் பணிப்பாளரால் முன்வைக்கப்பட்டது.

மேலும் வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர், மருத்துவமனைகளின் கழிவு நீர்முகாமைத்துவத்தைமுன்னெடுப்பதற்கான திட்ட முன்மொழிவையும், தீவுப் பகுதிகளுக்கான அம்புலன்ஸ் படகின் தேவையையும் குறிப்பிட்டார்.

மேலும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர், கடந்த காலங்களில் தயாரிக்கப்பட்ட யாழ். நகருக்கான வெள்ளத்தடுப்பு திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பில் முன்மொழிந்தார். மேலும், யாழ்ப்பாணம் புதியசந்தைக்கட்டத்தொகுதியின்மூன்றாம் கட்டத்தை செயற்படுத்துவதற்கான திட்டத்தையும் முன்வைத்தார். அத்துடன் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்குமறுவாழ்வளிக்கும் நிலையத்தை வடக்கில் அமைப்பதற்கான தேவைப்பாட்டையும் அவர் தெரிவித்தார்.

ஒவ்வொரு திணைக்களங்களினதும் முன்மொழிவுகள் திட்டவரைவுகளாக தயாரிக்கப்பட்டு வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் – திட்டமிடல் ஊடாக அவை தொகுக்கப்பட்டு ஆளுநரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கைகளை விரைந்து முடிக்குமாறு ஆளுநர், அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார் – என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## இனி இது .....

தன்னால் சமர்ப்பிக்க முடியாத காரணத்தால் தான் பதவி விலகுகிறார் என்று தெரிவித்திருந்தார். அவர் மட்டுமல்ல நாடாளுமன்ற அதிகாரிகள் அல்லது அவலுலர்கள் சிலருக்கும் பதவிகள் பறிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சபாநாயகரின் கலாநிதிப் பட்டம் குறித்த சர்ச்சைகள் எழுந்ததும் நாடாளுமன்ற இணையத் தளத்தில் இருந்து அவரது பெயருக்கு முன்னாள் இருந்த கலாநிதி என்கிற சொல் நீக்கப்பட்டது. அவருடைய பெயருக்கு முன்னால் இருந்து மட்டுமல்ல, வேறு பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களுக்கு முன்பாக இருந்தும்கூட அந்தச் சொல் நீக்கப்பட்டது. இது எதிர்க் கட்சிகளுக்கு மேலும் வாய்ப்பாகப் போய்விட்டது.

சபாநாயகரைப் பலியெடுத்தது போதாது என்றுஇந்தவிவகாரத்தைஇறுக்கப்பற்றியுள்ள எதிர்க் கட்சிகள், மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் கல்வி தகமை குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளனர். இதையடுத்து நாடாளுமன்ற இணையத்தளத்தில் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களுக்கு முன்னால் கலாநிதிப் பட்டங்கள் குறிப்பிடப்பட்டுப் பின்னர் நீக்கப்பட்டதற்கான காரணங்களைஉடனடியாகச்சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்டஅதிகாரிகளுக்குஆளும்தரப்பால் உத்தரவிடப்பட்டுள்ளது. தவறுக்கு யார் பொறுப்பு என்பதையும் அறியத்தரும்படி கேட்கப்பட்டுள்ளது. வரும் திங்கட்கிழமைக்கு முன்அந்தவிவரங்கள்தரப்படவேண்டும்என்று கண்டிப்பான உத்தரவு போடப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற இணையத்தளத்தில் நாடாளுமன்ற பதிவுகள் பிரிவு மூலமே தகவல்கள் உள்ளிடப்படுகின்றன. அங்கு பணியாற்றுபவர்கள் வேண்டும் என்றே திட்டமிட்டு சர்ச்சைகளை உருவாக்கும் வகையில் இவ்வாறு தவறான தகவல்களை உள்ளிட்டார்களோ என்கிற சந்தேகம் இப்போது ஆளும் தரப்பினரிடம் பற்றிக்கொண்டுள்ளது. அதனால் தவறு செய்த அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் சிலர் தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

..............................

பொதுக் கட்டமைப்பு, பொதுக் கட்டமைப்பு என்று ஒன்று எங்காவது இருந்தால் அதனை உடனடியாக அலுவலகத்துடன் தொடர்புக்கொள்ளச் சொல்லவும் என்று ஓட்டோவில் ஒலிபெருக்கி பொருத்தி அறிவிப்புச் செய்யவேண்டியிருக்கும் போல... காரணம் அவர்கள் செய்த வேலையால் இப்போது மாட்டிக்கொண்டு முழிப்பவர் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினரான அரியநேந்திரன்.

2024 அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டபோதும் செலவுக் கணக்கு விவரத்தை முறையாகச் சமர்ப்பிக்காத காரணத்தால் இப்போது அவருக்கு எதிராகவும் விசாரணையைத் தொடங்கியிருப்பதாக மோசடி விசாரணைப் பணியகம் நேற்று அறிவித்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது செலவுகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்காத ஏழு ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளுக்கு எதிராக இந்த விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சரத் அசித்த பண்டார, ஆரியவன்ச திசாநாயக்க, பாக்கியசெல்வம் அரியநேந்திரன், சன்னலலித்விக்கிரமசிங்க, அர்ஜுனரணதுங்க, சரத் அத்துகோரள மற்றும் மார்ட்டின் சரச்சந்த வீரவர்தன ஆகியோருக்கு எதிராகவே இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல் ஆணையாளர் பிரசாத் சிந்தக குலரத்னவினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மோசடி விசாரணைப் பணியகம் தெரிவித்துள்ளது.

2023ஆம் ஆண்டு 03 ஆம் இலக்க தேர்தல்செலவுகள்ஒழுங்குமுறைச்சட்டத்தின் கீழ் கடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் மற்றும் அவர்களது பிரதிநிதிகளும் ஜனாதிபதித் தேர்தலின்போதுமேற்கொள்ளப்பட்டசெலவுகள் தொடர்பான அறிக்கைகளை ஒக்டோபர் 13க்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாதவர்கள் மற்றும் கணக்குகளை ஏனோதானோ என்று சமர்ப்பித்தவர்கள் ஆகியோர்மீதேநடவடிக்கைஎடுக்கப்படவுள்ளது.

இதற்கமைய ஏழு தனி விசாரணை கோப்புகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். தேர்தல் ஒழுங்குமுறைச் செலவுச் சட்டத்தின் பிரகாரம், சந்தேகநபர்கள் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்டால், அவர்களுக்குவாக்குரிமைபறிக்கப்படுவதோடு, 100,000 ரூபா அபராதமும் விதிக்கப்படும்.

இதனடிப்படையில் மோசடி விசாரணைப் பணியகம் நீதிமன்றில் தாக்கல் செய்த மனுக்களைஆராய்ந்தநீதிவான்முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு மார்ச் 14 முழு அறிக்கையைச் சமர்ப்பிக்கும்படி உத்தரவிட்டிருக்கின்றார்.

குறிப்பிட்ட திகதிக்குள் அரியநேந்திரனின் செலவுக் கணக்கு விவரம் தேர்தல் திணைக்களத்தில் சேர்ப்பிக்கப்படவில்லை. தாம் மின்னஞ்சலில் அனுப்பினோம், அடுத்த நாள் நேரில் கையளித்தோம் என்றெல்லாம் அவரை வேட்பாளராக நிறுத்தியவர்கள் என்னதான் விளக்கம் சொன்னாலும் தேர்தல் திணைக்களம் அதனை எல்லாம் ஏற்பதற்குத் தயாராக இல்லை.

கடைசியில் தேசியம் தேசியம் என்று அரியநேத்திரனின் வாக்கையும் புடுங்கப் போகிறார்கள் பாவிகள்...

அரியநேத்திரனை அரசுத் தலைவர் வேட்பாளராக நிறுத்திய பொதுக் கட்டமைப்பு மட்டுமல்ல அதில் அரைவாசியாக இருந்த ஜனநாயகத்தமிழ்த்தேசியக்கூட்டணியேகூ-ட இன்று சிதைந்து சின்னாபின்னப்பட்டு, அதற்குள் யார் பெரியவன், யாருக்கு கட்சிக் கட்டமைப்புஉண்டு,அடுத்ததேர்தலில்யாருக்கு எந்தளவு இடம்கொடுப்பது என்று சிதறிப் போய்க் கிடக்கும் நிலையில் அரியநேத்திரன் கடைசியில் நம்பியிருக்கவேண்டியது குடிமைச் சமூகங்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டவர்களையும் பத்தி எழுத்தாளர்களையும்தான். அவர்களாவது அரியநேந்திரனின்வாக்கையாவதுகாப்பாற்றக் கைகொடுப்பார்களா?

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இந்தியாவிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடித்தளத்திலிருந்து வந்தவரான ஜனாதிபதி, இப்போது உத்தியோகபூர்வமாக அந்த நாட்டுக்குச் செல்கிறார்.

அரசுத் தலைவரின் இந்தப் பயணத்தின்போது அவர் இந்திய குடியரசுத் தலைவர், பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரைச் சந்தித்துப் பேசவுள்ளார். பரஸ்பர நலன் அடிப்படையிலான இருதரப்பு விவகாரங்கள் குறித்து பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியுடன் விரிவான பேச்சுக்கள் இடம்பெறவுள்ளன.

அத்துடன்இந்தியாவுக்கும்இலங்கைக்கும் இடையிலான முதலீட்டு மற்றும் வர்த்தகத் தொடர்புகளை மேம்படுத்தும் நோக்குடன் டில்லியில் நடைபெறும் வர்த்தக நிகழ்வொன்றிலும் அநுரகுமார திசாநாயக்க கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தப் பயணத்தின் ஓர் அங்கமாக அவர் புத்த கயாவிற்கும் செல்லவுள்ளார். இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடல் மார்க்கமாக இந்தியாவின்மிகவும்நெருங்கியஅயல்நாடாக உள்ள இலங்கையானது, பிரதமரின் சாகர் நோக்கு (பிராந்தியத்தில் அனைவருக்கும் பாதுகாப்பும் செழுமையும்) மற்றும் இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் ஆகிய கொள்கைகளில் முக்கிய இடத்தினைக் கொண்டிருக்கின்றது.

ஜனாதிபதி திசநாயக்கவின் இந்தியப் பயணம் இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்புநலன்கள்மற்றும்பன்முகத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலான ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வேலை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடங்குவர். 2022ஆம்ஆண்டில் 310,948 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளனர். இவர்களில் அதிகளவானோர் ஐக்கிய அரபு அமீரகம் இராச்சியத்திற்குச் சென்றுள்ளனர். 49,499 பேர் அங்கு சென்றுள்ளனர்.

2024ஆம்ஆண்டில்தென்கொரியாவுக்கு 7,002 பேரும், இஸ்ரேலுக்கு 9,211 பேரும், ருமேனியாவுக்கு 10,274 பேரும், ஜப்பானுக்கு 8,251 பேரும் வேலைவாய்ப்புக்காகச் சென்றுள்ளனர் என்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

## எலிக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் குறிப்பாக வடமராட்சியில் எலிக் காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது என்கிற அச்சம் நிலவி வரும் நிலையில் மருத்துவர் சத்தியமூர்த்தி நிலமை என்ன என்பதை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெளிவாகப் பதிவு செய்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது 5 நோயாளர்கள் தற்போது லெப்டோஸ்பைரோசிஸ் நோய்த் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்று வருகின்றனர். 7 பேர் உயிரிழந்ததில் ஒருவர் லெப்டோஸ்பைரோசிஸ் காரணமாக உயிரிழந்தார் என்று ஆய்வுகூடச் சோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மூவருக்கும் அந்த நோயே இருந்திருக்கவேண்டும். எஞ்சிய மூவரில் இருவருக்கு வைரஸ் தொற்றோடு ஏற்பட்ட வேறு நோய்களும் மற்றொருவருக்கு அவரது இருதயத்தொற்றோடுவந்தவைரஸ்தொற்றும் இறப்புக்குக் காரணமாக அமைந்திருந்தன.

எலிக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளதாகக் கருதப்படும் மேலும் ஐவருக்குச் சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. அவர்களுக்கும் லெப்டோஸ்பைரோசிஸ் தொற்றுத்தான் இருக்கின்றதா என்பதை குருதிப் பரிசோதனை முடிவுகள் வந்த பின்னர்தான் உறுதிப்படுத்த முடியும். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்குச் சிகிச்சை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# மலையகத்தவருக்கும் நன்மையை தருமா ஆளும்தரப்பு தீர்மானங்கள்?

## பாரத் அருள்சாமி கேள்வி

(கிஷாந்தன்)

மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமான பெரும்பான்மையுடன் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதில் பின்னடைவை காட்டுகிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி மற்றும் அத்தியாவசிய பொருள்களின் தட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்வதில் அரசாங்கம் பாரிய பின்னடைவு சந்தித்து வருகிறது. இது நாட்டு மக்களை பெருமளவு பாதிக்கும் நிலையில் விசேடமாக மலையக மக்களை பெருமளவு பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது என பாரத் அருள்சாமி அடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தி பாரத் அருள்சாமி வழங்கி உள்ள ஊடக அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது -

மலையக மக்களின் காணி உரிமை என்பது அவர்களின் அடிப்படை உரிமை கோரலும் அவர்களின் பல ஆண்டு எதிர்பார்ப்பும் ஆகும். இதனை தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் அவர்களும் வலியுறுத்தியுள்ளார். பல அரசாங்கங்கள் ஆட்சிபீடம் ஏறிய பொழுது எமது மக்களுக்கு பல வாக்குறுதிகளை அளிக்கின்றார்கள். அந்த வகையில் தேசிய மக்கள் சக்தி மற்றும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மலையக மேடைகளில் பல புரட்சிகரமான திட்டங்களை எமது மக்களுக்கு செய்வதாக உறுதியளித்திருந்தார்.

இருப்பினும் எமது அடிப்படை எதிர்பார்ப்பான காணி உரிமை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் அல்லது பொறுப்பான அமைச்சரின் உறுதி வழங்காத நிலையில் அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள செய்தி பலரை ஆச்சரியத்துக்குள்ளாக்கி உள்ளது.

கடந்த காலங்களில் 7 பேர்ச் நிலம் வழங்க வேண்டும் என பல போராட்டங்களுக்கு மத்தியில் அது சாதகமானது பின்னர் 10 பேர்ச் நிலத்தை பெற்றுக் கொடுப்பதற்கான பல பிரயதனங்களுக்கு மத்தியில் பல எதிர்ப்புகளை தாண்டி இந்திய அரசாங்கத்தால் கட்டப்பட்டு வரும் 1700 வீடுகளுக்கு எம்மால் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

நான் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக கடமையாற்றிய காலப்பகுதியில் இந் நிலங்களை விடுவித்து வழங்க பல எதிர்ப்புக்களையும், சவால்களையும் சந்தித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 2020 ஆம் ஆண்டு மக்கள் வாழும் காணிகளுக்கான உறுதி பத்திரத்தை பெற்றுக் கொடுக்க விசேட வேலை திட்டத்தை அறிமுகப்படுத்தி அதன் மூலமாக தற்போது காணி மறுசீர்திருத்த ஆணைக்குழுவால் எமது மலையாக மக்களுக்கு சட்ட ரீதியான காணி உறுதி பத்திரங்களை வழங்க பல சவால்களையும் எதிர்ப்புக்களையும் தாண்டி அதன் இறுதிக்கட்டத்தை அடைய நான் வழி சமைத்து கொடுத்தேன். அதன் காரணமாக இன்று நுவரெலியா, கண்டி, மாத்தளை ஆகிய மாவட்டங்களுக்கு சட்டப் பூர்வமான காணி உறுதி பத்திரங்கள் எமது சொந்தங்களுக்கு வழங்கப்பட்ட வண்ணம் உள்ளக. இது எனக்கு மட்டற்ற பெருமையை வழங்குகிறது. இவ்வாறான நிலையில் அரசாங்கம் மாடி வீடுகளை அமைப்பதற்கான யோசனை முன் வைத்துள்ளமை அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.

தற்போது நாடெங்கிலும் லயன் மற்றும் தற்காலிக குழு வாழும் 170000 இற்கும் அதிகமான குடும்பங்கள் பத்து பேர்ச் அடிப்படையில் தனி வீடுகளைப் பெற்றுக் கொள்ள மொத்த பெருந்தோட்ட பகுதிகளில் ஒரு வீதம் குறைவான நிலப்பகுதியே தேவைப்படும். இது தொடர்பான ஆய்வறிக்கைகள் பல சிவில் அமைப்புகள் மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு, காணி அமைச்சு என்பவற்றின் பரிந்துரையோடு நான் தயாரித்திருந்த அறிக்கை கடந்த காலங்களில் என்னால் அரசுக்கு வழங்கப்பட்டது. இருப்பினும் முன்னாள் பிரதமரின் அசம்பந்தமான போக்கின் காரணமாக இத்திட்டத்துக்கான தீர்வு பின்னடைவானது.

எனவே மலையகப் பகுதிகளில் கண்டி மாவட்டம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்புரிமையையும் மக்களின் பேராதரவையும் பெற்றுள்ளது. எனவே மக்களின் பெரும் எதிர்பார்ப்பும் அவர்களுக்கு சேவை செய்ய வேண்டிய தார்மீகப் பொறுப்பும் அரசாங்கத்திடம் உள்ளது.

மக்களின் அடிப்படை எதிர்பார்ப்பான காணி உரிமை விடயத்தில் அரசாங்கம் உரிய திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன், எமது காணி உரிமை விடயத்தில் மாற்றுக் கருத்துக்கள் ஏற்படின் மக்களின் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் என பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

# சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியில் ஆங்கில மொழி மேம்பாட்டு நிகழ்ச்சி

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது கமு/கமு/லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தின் ஆங்கிலக் கலா 2024, திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது ரியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் எம்.ஐ. சம்சுதீன் தலைமையில் வெற்றிகரமாக நடைபெற்றது.

பாடசாலை பிரதி அதிபர் எஸ்.எம். சுஜன், இணைப் பாடத்திட்ட உதவி அதிபர் எம்.எப்.எம்.ஆர். ஹாதிம் ஆகியோரால் ஒருங்கிணைக் கப்பட்டு நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக கல்முனை வலயக் கல்வி அலுவலக பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி எம்.எச்.எம். ரியாசா, சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி திருமதி ஏ. அஸ்மா மலீக், ஆங்கில பாட இணைப்பாளர் ஏ.எல்.எம். ஆரிப் ஆகியோர் கலந்துகொண்டதுடன் சிறப்பு அதிதியாக நியூ ஃபேஷன் மோட்டார்ஸின் உரிமையாளரான எம்.வை.முபாரக் கலந்து கொண்டார்.

மாணவர்கள் தங்கள் மேடை நிகழ்ச்சிகளால் பார்வையாளர்களை கவர்ந்ததுடன் அவர்களின் முயற்சிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றனர். நிகழ்வின் சிறப்பம்சமாக கல்முனை கல்வி வலயம் நாடளாவிய ரீதியில் சாதாரண தர பெறுபேற்றில் 02 ஆம் இடத்தைப் பெற்றதற்காக வலயக்கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் பாடசாலை பகுதித் தலைவர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழு செயலாளர் ,ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








# ஐயப்பன் தேவஸ்தான பூஜை





கோண்டாவிலில் அமைந்துள்ள ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் இலட்சநாம அர்ச்சனை இலட்சகோமத்தை பிரதம சிவாச்சாரியார் ஹரிஹரசுதன் சிவாச்சாரியார் தலைமையில் பூஜைகள் இடம்பெறுவதையும் அதில் கலந்துகொண்ட சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா உரையாற்றுவதனையும் கௌரவிக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சிறப்பான நல்ல நகர்வு

இலங்கையில் கடந்த காலங்களில் தவறுகளுக்குப் பொறுப்புச் செல்லும் தன்மை இருந்ததில்லை. அதிலும் குறிப்பாக ஆட்சியாளர்கள் தமது தவறுகளுக்குப் பொறுப்பேற்றதேயில்லை. அப்படியிருக்கும்போது நிகழந்த தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்கும் பண்பை அவர்களிடமிருந்து எதிர்பார்க்கவே முடியாது. அத்தகைய நிலமை மாறும் என்பதற்கான அறிகுறி சபாநாயகரின் பதவி விலகல் மூலம் இப்போது வெளிப்பட்டிருக்கின்றது. அது வரவேற்கத்தக்க மாற்றம்.

சபாநாயகரின் கல்வித் தகைமையாகக் குறிப்பிடப்பட்ட கலாநிதி என்கிற பி.எச்.டி. பட்ட ஆய்வு முடித்த முனைவர் நிலையை எதிர்க் கட்சிகள் கடுமையாகக் கேள்விக்குள்ளாக்கியதன் விளைவாக அவர் பதவியைத் துறந்திருக்கின்றார்.

தான் தனது கல்வித் தகைமை குறித்து மக்களுக்குத் தவறான தகவல் எதனையும் தரவில்லை என்றும் இருந்தாலும் தனது கலாநிதிப் பட்டத்தை நிரூபிப்பதற்குத் தேவையான ஆவணங்களை உடனடியாகச் சமர்ப்பிக்க முடியாத நிலையில் தான் இப்போது இருப்பதால் பதவி விலகுகிறார் என்றும் சபாநாயகர் நேற்று அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

இலங்கை பாராளுமன்ற வரலாற்றில் சபாநாயகர் ஒருவர் சுயமாக பதவி விலகியமையும்கூட இதுவே முதல் தடவையாக கருதப்படுகிறது. அத்துடன் கல்வி தகைமை விவகாரத்தில் குறுகிய காலத்தில் – ஒரு மாதத்திற்கும் –குறைவான காலத்தில் –சபாநாயகர் ஒருவர் பதவி விலகியமையும் இதுவே முதல் தடவையாகும்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஆளும்தரப்பின் கொள்கைப் பிரகடன உரை நவம்பர் 21 இடம்பெற்றது. இதன்போது 10ஆவது நாடாளுமன்றத்தின் புதிய சபாநாயகர் பதவிக்கு தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிப் பெற்ற அசோக்க சபுமல் ரன்வலவின் பெயரை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய முன்மொழிந்தார். இதனை அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் வழிமொழிந்தார்.

சபாநாயகர் பதவிக்கு எதிர்க்கட்சிகளின் சார்பில் பிறிதொருவரின் பெயர் முன்மொழியப்படாத நிலையில் பத்தாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக அசோக்க சபுமல் ரன்வல வாக்கெடுப்பின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தனது உத்தியோகபூர்வ முகப்பு புத்தகத்தில் 'சபாநாயகர் அவரது கலாநிதி பட்டத்தை உறுதிப்படுத்த வேண்டும் அல்லது பதவி விலக வேண்டும்' என்று பதிவேற்றியதைத் தொடர்ந்து இந்தச் சர்ச்சை நாடு முழுவதும் பற்றிக்கொண்டது.

சபாநாயகர் தனது கல்வி தகைமையை நிரூபிக்கவேண்டும் அல்லது பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கடுமையாக வலியுறுத்தின. நாட்டின் மூன்றாவது குடிமகனான சபாநாயகர் கல்வி தகைமை விவகாரத்தில் மோசடி செய்வாராயின் எவ்வாறு நாடாளுமன்றத்தின் சுயாதீனம் பாதுகாக்கப்படும் என்றும் எதிர்க்கட்சிகள் கேள்வியெழுப்பின. இவையே சபாநாயகரின் பதவி விலகலுக்குக் காரணமாகின.

''எனது கல்வி தகைமை குறித்து சமூகத்தின் மத்தியில் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. கல்வி தகைமை குறித்து எவ்விதமான பொய்யான தகவல்களையும் நான் வழங்கவில்லை. கல்வி தகைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒருசில ஆவணங்கள் தற்சமயம் என்னிடம் இல்லை. அந்த ஆவணங்களை உரிய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை விரைவாக பெற்றுக் கொள்வது கடினமாக உள்ளது.

எனக்குப் கலாநிதி பட்டத்தை வழங்கிய ஜப்பானின் வஹிடா பல்கலைக்கழகத்துக்கு இணையான ஆராய்ச்சி நிறுவனம் கலாநிதி பட்டத்துக்குரிய ஆவணங்களை வெகுவிரைவில் வழங்குவதாக குறிப்பிட்டுள்ள நிலையில் அவற்றை வெகுவிரைவில் முன்வைக்க எதிர்பார்த்துள்ளேன்.

எவ்வாறாயினும் தோற்றம் பெற்றுள்ள நிலைமையை கருத்திற் கொண்டு ஆளும்தரப்பையும், எம்மீது நம்பிக்கை கொண்ட மக்களையும் நெருக்கடிக்குள்ளாக்குவதை தவிர்க்கும் வகையில் சபாநாயகர் பதவியை இராஜிநாமா செய்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவரது பட்டம் தொடர்பில் அவர் குறிப்பிடும் செய்தி உண்மையோ பொய்யோ என்பதற்கு அப்பால், அவர் குற்றச்சாட்டுக்களுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று, குற்றச்சாட்டுக்கள் பொய்யெனத் தன்னால் நிரூபிக்க முடியாதபட்சத்தில் தார்மீகப் பொறுப்பேற்று பதவியிலிருந்து விலகியதன் மூலம் இலங்கையில் உண்மையான மாற்றத்திற்கு வித்திட்டுள்ளார். அதற்காக அவரைப் பாராட்டுவோம். சிறந்த எதிர்காலத்தை நோக்கி நாடு முன்னேற வாழ்த்துவோம்.



# வடக்கில் ஜேவிபி பெற்ற வெற்றியில் சீனத் தூதருக்கு என்ன மகிழ்ச்சி?

**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

வடக்கில் ஜேவிபி பெற்ற வெற்றி குறித்து சீனத் தூதுவர் அண்மையில் மிகுந்த மகிழ்ச்சியுடன் பேசியிருந்தார். வடக்கு மக்களுக் கான நிவாரணத் திட்டங்களை ஆரம்பிக்க சீனா தயாராக இருந்தது என்றும் ஆனால் வடக்கின் அரசியல்வாதிகள் அதற்கு அனுமதிக்கவில்லை எனவும் சீனத் தூதுவர் தெரிவித்திருந்தார்.

வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் என்று அவர் குறிப்பிடுவது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினைச் சேர்ந்த அரசியல்வாதிகளையே என்பது சொல்லித் தெரியவேண்டிய ஒன்றல்ல. வடக்கிலுள்ள இந்த அரசியல்வாதிகள் மூலம் வெளிச் சக்திகள் செல்வாக்கு செலுத்தி சீனத் திட்டங்களை நிறுத்துவதாக அவர் மறைமுகமாகக் குற்றஞ்சாட்டினார்.

சீனத்தூதர் முறைமுகமாகக் குத்திக்காட்டியது




இந்தியாவைத்தான் என்பதைப் புரிந்-துகொள்வதிலும் பெரும் சிரமங்கள் ஏதுமில்லை. அதாவது இந்தியாவின் அறிவுறுத்தலின் பேரில் வடக்கில் செயற்படும் தமிழ் அரசியல்வாதிகள் தோற்கடிக்கப்பட்டமை சீனாவுக்குக் கிடைத்த வெற்றி என்பதையே அவர் மறைமுகமாகக் குறிப்பிட விரும்பியிருப்பார்.

போரின் போது இலங்கைப் படைகளுக்குச் சீனா ஆதரவு அளித்தது. மனித உரிமைக் குற்றச்சாட்டுகள் காரணமாக உலகின் ஏனைய நாடுகள் இலங்கைப் படையினருக்கு போருக்கான ஆயுதங்களை விற்கத் தடை விதித்திருந்தபோது சீனாவே தேவையான ஆயுதங்களை விற்பனை செய்தது. அத்துடன், போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்காக இலங்கை ஆளும்தரப்புக்கு எதிராக மேற்கத்திய நாடுகள் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்களை நிறைவேற்றிய போது, அந்தத் தீர்மானங்களுக்கு எதிராக இலங்கைக்கு ஆதரவாக சீனா வாக்களித்தது. இதனால்தான் வடக்கில் உள்ள தமிழ் மக்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் சீனாவை விரும்பத்தகாத நோக்கில் பார்த்தனர்.

போர் நிறைவடைந்த பின்னர், மகிந்தவின் ஆட்சியின்போது சீனத்தூதுவர் முதன்முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைச் சந்தித்து வடக்கிற்குச் சென்று வடக்கில் ஆரம்பிக்கப்படக்கூடிய திட்டங்கள் குறித்துக் கேட்டறிந்தார். கோட்டாபய ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர், சீனத் தூதுவர் தமிழ் தேசிய உடையில் வடக்கிற்குச் சென்றார். யாழ்ப்பாணத்தில் உள்ள கோவில்களுக்கும் சென்று வழிபட்டார். சீனத் தூதுவரின் இந்த பொதுமக்கள் தொடர்பாடல் பரப்புரைக்குப் பிறகு, யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள மூன்று தீவுகளில் சூரியமின்கல மின்உற்பத்தி ஆலைகளைத் தொடங்கும் திட்டங்களை சீனா முன்மொழிந்தது.

சீனாவின் இந்தத் திட்டங்கள் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறி, இலங்கை அரசிடம் இந்தியா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதை அடுத்து, வடக்கில் சீனத் திட்டங்களை கோட்டா அனுமதிக் கவில்லை. அந்தத் திட்டங்கள் பின்னர் இந்தியாவிற்கு வழங்கப்பட்டன. ஆனாலு-ம் சீனா வடக்கைக் கைவிடவில்லை. சீனத்தூதுவர் வடபகுதி மீனவர்கள் மற்றும் மக்களுக்கு நிவாரணப் பொருட்களை விநியோகிக்க ஆரம்பித்தார்.

சீனாவின் மூலோபாயம் மக்களை வெல்வது மற்றும் சீனாவை சமாளிக்க வடக்கின் அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுப்பதாக இருந்திருக்கவேண்டும். இந்த நிவாரணத் திட்டத்தை சீனா தொடர்ந்து அமுல்படுத்தி வரும் நிலையில், 2024ஆம்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# வடக்கில் ஜேவிபி ...

4ம் பக்க தொடர்ச்சி..........



ஆண்டு பொதுத் தேர்தலில் வடக்கு மக்கள் வடக்கின் அரசியல்கட்சிகளைநிராகரித்துஜேவிபிவேட்பாளர்களுக்கு வாக்களித்தனர். இனி வடக்கின் கட்சிகளால் வடபகுதி மக்களை வழிநடத்த முடியாது என இப்போது சீனா நினைக்கிறது, இனி சீனாவினால் வடக்கு மக்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு சீனத் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

தென்னிலங்கை சிங்களக் கட்சிகள் வடக்கில் வெற்றிபெற்றது இது முதல் தடவையல்ல. ஐக்கிய தேசியக் கட்சி இதற்கு முன்னர் வடக்கிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளது. அதற்காக வடக்கில் யாழ்ப்பாணம், வன்னி போன்ற மாவட்டங்களில் ஜேவிபி பெற்ற வெற்றியைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. ஆனால் அந்த வெற்றி சீனாவின் நகர்வுகளால் வந்ததன்று. அது வடக்கில் இருந்த பிரதான அரசியல் கட்சிகளில் ஏற்பட்ட பிளவே காரணம்.

உதாரணமாக யாழ் மாவட்டத்தில் ஜேவிபி 80,830 வாக்குகளைப் பெற்றுள்ளது. தனித் தனியாகப் போட்டியிட்ட தமிழ் கட்சிகள் அனைத்தும் சேர்ந்து 1 லட்சத்து 27 ஆயிரத்து 121 வாக்குகள் கிடைத்துள்ளன. தமிழ்க் கட்சிகளில் ஏற்பட்டுள்ள பிளவு ஜேவிபிக்கு சாதகமாக அமைந்திருப்பதையே இது காட்டுகிறது. இதன் மூலம் தமிழ் பாரம்பரியக் கட்சிகள் மற்றும் வடக்கின் அரசியல்வாதிகளின் அரசியல் முடிவுக்கு வந்துவிட்டது என்று சீனத் தூதுவர் நினைத்தால் அது தவறு. இந்தியாவுடன் நெருங்கிய உறவைக் கொண்டுள்ள வடக்கில் தமிழ்க் கட்சிகளின் தோல்வியே வடபகுதி மக்களை இந்தியாவை எதிர்க்க வைத்துள்ளது என சீனத் தூதுவர் கருதினால் அதுவும் தவறு.

# மக்கள் காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம்

## புத்தளம் மாவட்டத்தில்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின், புத்தளம் மாவட்ட செயற்குழுக் கூட்டம், திங்கட்கிழமை தில்லையடியில் இடம்பெற்றது.

கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானரிஷாத்பதியுதீன்தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்தில், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடுவது என்பது குறித்து, விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புத்தளத்தில் போட்டியிட்ட வேட்பாளர்களான தாஹிர், முஹம்மத் மற்றும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.







காலைக்கதிர் Kalaikkathir

# சுயதொழிலை விருத்தி செய்வதற்கு நாவிதன்வெளியில் கருத்தரங்கு

(ஹாரீஸ்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் ஒருங்கிணைப்பில் சுயதொழிலினை விருத்தி செய்வதற்கான கருத்தரங்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேசசெயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.







இதன்போது வெளிநாட்டு தொழிலாளர்களது தற்கால சூழ்நிலை மற்றும் அவர்களது தொழில்வாய்ப்பு பற்றியும் தொழிலுக்காக வெளிநாடு செல்வது பற்றியும் சுயதொழிலை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வது பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இக்கருத்தரங்கு வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அம்பாரை மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இணைப்பாளர் ஏ.எம். பர்ஸான் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அம்பாறை மாவட்ட அலுவலகம் சார்பாக எம்.ஏ.எஸ்.எம்.றிஸான் அபிவிருத்தி உத்தியோகத்தரும் நாவிதன்வெளி பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையுடனான உறவை வலுப்படுத்த அமைதிப்படை

## அமெரிக்காவிலிருந்து வருகை

கடந்த வருடம் இடம்பெற்ற அமைதிப்படை நிகழ்ச்சித்திட்டத்தின் வரலாற்று ரீதியான மீள்தொடக்கத்தின் பின்னர் இலங்கைக்கு வருகைதந்த தன்னார்வலர்களின் இரண்டாவது குழுவைச் சேர்ந்த 19 அமெரிக்க அமைதிப்படை தன்னார்வலர்கள் வியாழக்கிழமை கொழும்பில் பதவிப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டனர்.

ஆழமடையும் அமெரிக்க இலங்கை பங்காண்மை மற்றும் கல்வி மற்றும் கலாசார பரிமாற்றம் தொடர்பான பகிரப்பட்ட அர்ப்பணிப்பு ஆகியவற்றை இந்நிகழ்வு அடிக்கோடிட்டுக்காட்டுகிறது.

கடந்த செப்ரெம்பர் மாதம் இலங்கைக்கு வருகைதந்த இத்தன்னார்வலர்களின் குழுவானது சிங்களம் அல்லது தமிழ், இலங்கையின் கலாசாரம் மற்றும் கற்பித்தல் முறைகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக இடம்பெற்ற 12 வாரகால தீவிர பயிற்சியினை நிறைவு செய்துள்ளது.

இலங்கை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்களுடன் இணைந்து கிராமியப் பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதற்காக அவர்கள் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள பாடசாலைகளில் ஆங்கில மொழி ஆசிரியர்களாகப் பணியாற்றுவர்.

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த கல்வியமைச்சின் ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் திணைக்களத்தின் பணிப்பாளரான நிமாலி பதுரலிய, அமைதிப்படையுடனான எமது ஒத்துழைப்பானது அனைத்து இலங்கையர்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ஆங்கில மொழிக் கல்வியை மேம்படுத்துகிறது.

எமது பாடசாலைகளுக்கும் சமூகங்களுக்கும் சேவையாற்றுகையில் தமக்கு முன்னாலுள்ள வளமான கலாசாரப் பரிமாற்ற வாய்ப்புகளைத் தழுவிக்கொள்ளுமாறு நான் இத்தன்னார்வலர்களை ஊக்குவிக்கிறேன் எனக் குறிப்பிட்டார். கல்வியமைச்சைச் சேர்ந்த மேலதிக செயலாளர் கலாநிதி நிஷாத் ஹந்துன் பத்திரனவும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டார்.




## மாகாணமட்ட போட்டிகளில்

# சென் பற்றிக்ஸ் கல்லூரி 2 பிரிவுகளில் சம்பியன்

வடமாகாண கல்வித் திணைக்களம் கடந்த செவ்வாய்க் கிழமைகிளிநொச்சி பொது விளையாட்டு அரங்கு மைதானத்தில் நடாத்திய ஆரம்பபிரிவு மாணவர்களுக்கான (தரம்:3, தரம்:4, தரம்:5) செயற்பட்டு மகிழ்வோம் மாகாணமட்ட போட்டிகளில் தரம்:-3 பிரிவில் மூன்றாம் இடத்தையும், தரம்:-4, தரம் :-5 ஆகிய இரு பிரிவுகளில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்கள் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

# முஸ்லிம் தர்ம நிதியிலிருந்து பொத்துவிலுக்கு ரூ. 10 லட்சம்

(ஸாகிர்)

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொத்துவில் பிரதேசத்துக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை வக்ப் சபை இணைந்து முஸ்லிம் தர்ம நிதியில் இருந்து வியாழக்கிழமை 10 லட்சம் ரூபா வழங்கி வைக்கப்பட்டது.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட மிகப் பெரும் வெள்ள அனர்த்தம் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டதை நாம் அறிவோம்.

அந்தவகையில் பொத்துவில் பிரதேச மக்களுக்கான நிவாரண உதவி வழங்கும் முகமாக கொள்ளுபிட்டி பள்ளிவாசல்கள் சம்மேளனம் இலங்கை வக்ப் சபைக்கு அனுப்பியிருந்த விண்ணப்பம் தொடர்பாக பரிசீலனை செய்யப்பட்டு இந்நிதி ஒதுக்கப்பட்டது.




ஒதுக்கப்பட்ட இந்நிதியானது காசோலையாக திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் அவர்களால் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் றிஸான் ஹுசைன் அவர்களிடம் திணைக்களத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ், உதவிப் பணிப்பாளர் எம்.எஸ். அலா அஹமட், திணைக்கள வக்ப் பிரிவு பொறுப்பாளர் ஏ.எஸ்.எம். ஜாவித், வக்ப் நியாய சபை செயலாளர் எம்.என். எம். ரோஷன் மற்றும் கொள்ளுப்பிட்டி சம்மேளனத் தலைவர் றிஸான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# மீன்பிடிப் படகு கவிழ்ந்ததில் மட்டக்களப்பில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு முகத்துவாரம் கடல் பகுதியில் மீன்பிடிப் படகு கவிழ்ந்து மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததுடன் மற்றொருவர் காப்பாற்றப்பட்டுள்ளார் என கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலையில் இடம்பெற்றுள்ளது.

திராய்மடு முருகன் கோவில் வீதியைச் சேர்ந்த 34 வயதுடையவரும், இரண்டு பிள்ளைகளின் தந்தையுமே உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு முகத்துவாரம் பகுதியிலிருந்து இயந்திரப் படகு ஒன்றில் கடலுக்கு மீன் பிடிக்க வியாழக்கிழமை இரவு இருவர் சென்றுள்ளனர்.

மீன்பிடித்துவிட்டு மீண்டும் நேற்று அதிகாலை முகத்துவாரம் கரைக்கு திரும்பிக்கொண்டிருந்தபோது படகு திடீரென கவிழ்ந்ததையடுத்து, ஒருவர் காப்பாற்றப்பட்டதுடன் மற்றொருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# கட்டாக்காலி மாடுகள், நாய்களால் போக்குவரத்துக்கு கடும் இடைஞ்சல்

## அம்பாறையில் மக்கள் எதிர்கொள்ளும் அவலம்

(பாறுக் ஷிஹான்)

கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்களால் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் போக்குவரத்து சிரமங்கள் தொடர்பில் பொதுமக்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளான நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, சாய்ந்தமருது மற்றும் நகரப்பகுதிகளில் அதிகளவான கட்டாக்காலி மாடுகள், நாய்கள் உலா வருகின்றன.

இதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட்டுகின்றனர்.





இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கைகளை எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். அதிகமான மாடுகள், நாய்கள் வீதியிலேயே படுத்துறங்குவதை அவதானிக்க கூடியதாக உள்ளது. கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு முன்னுள்ள வீதியில் நாய்கள் நடமாடுவதோடு பல நாய்கள் பொலிஸ் நிலையம் செல்லும் வாசலில் வீதியில் படுத்துறங்குகின்றன.

மாலை நேரப் பொழுதில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவதால் இரவுப்பொழுதை ஒளியூட்டுவதற்காக வீதி விளக்குகள் போதியளவில் இல்லாத ஒரு துர்ப்பாக்கிய நிலையும் இங்கு காணப்படுகின்றது.எதிர்பாராத நேரத்தில் வாகனங்களுக்கு குறுக்காக பாயும் போது நாயுடன் வாகனம் மோதிக் கொள்வதை தவிர்ப்பதற்காக திடீரெனதடுப்பிடும்பொழுது ஏற்படும் அசௌகரியம் பாரிய போக்குவரத்து மனவுளைச்சலுக்கும் அச்சத்திற்கும் காரணமாகிப் போகும் சூழல் அப்பகுதியில் இருக்கின்றது.

எனவே சமூகநலன் கருதி மாநகர சபை மற்றும் பிராந்திய சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அனைவரும் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

## நாடாளுமன்றுக்குத் தெரிவாகிய 22 முஸ்லிம் எம்.பிக்கள் விவரம்

(சியாஜ்)

தேசிய மக்கள் சக்தி (திசைகாட்டி)

1. ரியாஸ் பாரூக் - கண்டி (64,043)
2. முஹம்மத் பஸ்மின் - கண்டி (57,716)
3. ரிஸ்வி ஸாலிஹ் - கொழும்பு (73, 018)
4. முனீர் முழப்பர் - கம்பஹா (109,815)
5. அர்கம் இல்யாஸ் - மாத்தறை (53,835)
6. அஸ்லம் - குருநாகல் (67,346)
7. முஹம்மத் பைசால் - புத்தளம் (42,939)
8. ஆதம் பாவா - தேசியப்பட்டியல்

ஐக்கிய மக்கள் கூட்டணி

9. ரவூப் ஹக்கீம் - கண்டி (30,883) - மு.கா. சார்பில்
10. ரிஷாத் பதியுதீன் - வன்னி (21,018) - மு.கா. சார்பில்
11. முஜிபுர் ரஹ்மான் - கொழும்பு (43,737)
12. மரிக்கார் - கொழும்பு (41,482)
13. இம்ரான் மஹ்ரூப் - திருகோணமலை (22,779)
14. கபீர் ஹாஷிம் - கேகாலை (36,034)
15. நிஸாம் காரியப்பர் - தேசியப்பட்டியல் - மு.கா. சார்பில்
16. முத்து மொஹம்மத் - தேசியப்பட்டியல் - மக்கள் காங்கிரஸ் சார்பிர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

17. எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் - மட்டக்களப்பு (32,410)
18. எம். உதுமாலெப்பை - திகாமடுல்ல (13,016)
19. சாலி நழீம் - தேசியப்பட்டியல்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

20. எம்.எம் தாஹிர் - திகாமடுல்ல (14,511)

இலங்கைத் தொழிலாளர் கட்சி

21. காதர் மஸ்தான் - வன்னி (13,511)

புதிய ஜனநாயக முன்னணி

22. பைசர் முஸ்தபா - தேசியப்பட்டியல்

## கிழக்கு மாகாண இலக்கிய விருது விழா கலாசார நிகழ்வுகளுடன் கோலாகலம்

கிழக்கு மாகாண கலாசார மற்றும் பண்பாட்டாளர்கள் திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய மாகாண அரச இலக்கிய விருது விழா புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் எஸ்.நவநீதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு சாதனையாளர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

இதில் கிழக்கு மாகாணத்தில் கடந்த 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட வாழ்நாள் சாதனையாளர்களுக்கான விருது, பல்துறை கலைஞர்களுக்கான வித்தகர் விருது, இளங்கலைஞர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் மாகாண மண்டபத்தில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த புத்தகம் மற்றும் சஞ்சிகைகளுக்கான விருதுகளும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களோடு நடைபெற்ற இந்த மாகாண இலக்கிய விருது வழங்கல் விழாவில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூகத்தின் கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாண செயலகத்தின் அரச உயர் அதிகாரிகள், மாகாண பணிப்பாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள், இலக்கிய அதிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





மாகாணத்தின் முன்னேற்றத்திற்கும் தேசத்தின் முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்து வரும் கலைஞர்களின் பணிகளை ஊக்குவித்து மாகாணரீதியான அங்கீகாரத்தை கலைஞர்களுக்கு வழங்குவதில் தாம் பெருமை அடைவதாக இங்கு உரையாற்றிய மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

கடந்தமூன்று ஆண்டுகளாககலைஞர்களுக்கு வழங்கப்பட வேண்டிய விருதுகளும் பாராட்டு கௌரவிப்புகளும் பல்வேறு தடைகள் காரணமாக வழங்கப்படாமல் இருந்த போதிலும் தற்போது பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் நாம் இதனை நிறைவு செய்திருக்கிறோம். இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் கலைஞர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ். நவநீதன் தெரிவித்தார்.

அம்பாறை, மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களை சேர்ந்த சுமார் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்கள் இங்கு பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான போக்குவரத்து இதர வசதிகள் அனைத்தும் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டிருந்தமையை கலைஞர்கள் பலரும் பாராட்டி பேசினர். விருது பெற்ற அனைத்து கலைஞர்களுக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

காலைக்கதிர் Kalaikkathir

## எலிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்கான போதிய வசதிகள் இருக்கின்றன. எனவே பொதுமக்கள் இந்த நோய் தொடர்பில் அதிக பதற்றம் அடையத் தேவையில்லை. வைத்திய நிபுணர்களின் சார்பில் இந்தக் கருத்தை நான் பதிவு செய்கின்றேன் - என்றார்.

இதேவேளை, எலிக் காய்ச்சல் தொடர்பாக நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்த யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் கேதீஸ்வரன் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது பரவி வரும் எலிக்காய்ச்சல் நோயினால் இதுவரை 58 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்24பேரும்,கரவெட்டிசுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் 24 பேரும், மருதங்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 6 பேரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 4 பேரும் இனங்காணப்பட்டுள்ளனர். இதுவரை இக்காய்ச்சலினால் யாழ். மாவட்டத்தில் 6 இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் இக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளார். இந் நோயாளர்களிடமிருந்து அனுப்பப்பட்ட மாதிரிகளில் 3 பேருக்கு எலிக்காய்ச்சல் நோய் இருப்பதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்காய்ச்சல் பரவி வரும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் யாருக்காவது காய்ச்சல் ஏற்படின் ஒரு நாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரச மருத்துவமனையை நாடும் படி பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்நோய் பரவக்கூடிய ஆபத்து இலக்கினரான விவசாயிகளுக்கு விவசாய திணைக்களத்தின் உதவியுடன் கிராம மட்ட விவசாய குழுக்கள் மூலம் தடுப்பு மருந்து வழங்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மேலும் கடல்நீர் ஏரிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் துப்பரவுப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் தடுப்பு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. இத் தடுப்பு மருந்தை வாரத்திற்கு ஒரு தடவை உட்கொள்ள. வேண்டும்.

மத்திய சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவிலிருந்து விசேட வைத்திய நிபுணர் குழு ஒன்று இந் நோய்ப்பரம்பலை ஆய்வு செய்வதற்காக யாழ் மாவட்டத்திற்கு வியாழக்கிழமை வருகை தந்தது. இவர்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கும், பருத்தித்துறை, கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் சென்று ஆய்வு செய்ததுடன் சில பிரதேசங்களுக்கு நேரில் சென்றும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதற்கு மேலதிகமாக கொழும்பு தொற்று நோய் தடுப்பு பிரிவிலிருந்து இன்னுமோர் விசேட வைத்திய நிபுணர் குழுவும் யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்றது. இவர்கள் களநிலவரங்களை ஆய்வு செய்து இந்நோய் பரம்பலை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக ஆலோசனை வழங்குவர்.

எலிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கும் தடுப்பு மருந்துகளை வழங்குவதற்காகவும் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்ட மருந்துகள் யாழ் மாவட்டத்திலுள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன, இந்நோய் பரவி வரும் பிரதேசங்களிலுள்ள வைத்திசாலைகளுக்கும் அவை அனுப்பிவைக்கப்பட்டள்ளது - என்றார்.

## பிணைமுறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தியுள்ளது.

இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்களில் 98 சதவீதம் பேர் மறுசீரமைப்புக்கு இணங்கியுள்ளனர். இலங்கையின் சர்வதேச இறையாண்மை பத்திரங்களின் மறுசீரமைப்பு தற்போதுள்ள பத்திரங்களுக்கு புதிய பத்திரங்களை பரிமாறிக்கொள்வதன் மூலம் ஆரம்பிக்கப்படும் எனநிதியமைச்சு முன்னதாக அறிவித்திருந்தது.

அதற்கான உத்தியோகபூர்வ அழைப்பு கடந்த நவம்பர் 26 அன்று இலங்கை ஆளும்தரப்பால் வெளியிடப்பட்டது. அப்போது நிலுவையில் இருந்த பத்திரங்களின் மதிப்பு 12.55 பில்லியன் டொலராக இருந்ததால் அதற்கேற்ப பத்திரங்கள் மறுசீரமைக்கப்பட இருந்தன.

இதற்கான அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்துள்ளதாக நவம்பர் 26 இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் நலிந்தஜயதிஸ்ஸ தெரிவித்திருந்தார்.

தற்போது கடன் பத்திரங்களை வைத்திருக்கும் தரப்பினர் அவற்றைக் கையளித்துப் புதிய பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள 3 வார கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அதன் இறுதிநாள் நேற்றாகும். அதன்படி, கூடிய விரைவில் இந்தப் பத்திர பரிமாற்ற செயல்பாட்டில் இணையுமாறு சம்பந்தப்பட்ட பத்திரதாரர்களிடம் இலங்கை கோரிக்கை ஒன்றையும் விடுத்திருந்தது.

2024 செப்டம்பர் 19 அன்று இரண்டு பத்திரதாரர்களுடன் கொள்கை ரீதியான ஒப்பந்தம் எட்டப்பட்டது. இதில் ஒரு தரப்பினர் சர்வதேச பத்திரங்களை வைத்திருக்கும் சர்வதேச முதலீட்டாளர்களைக் கொண்டுள்ள நிலையில், மற்றொரு தரப்பினர் உள்நாட்டு நிதி நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

## இந்திய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி நிலைகளில் உள்ள பல இருதரப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து இந்த கலந்துரையாடலின்போது கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியக் குழுவில் உயர்ஆணையர் சந்தோஷ் ஜாவுடன் இந்திய உயர்உயர் ஆணையத்தின் சிரேஷ்ட அதிகாரிகளும் இடம்பெற்றிருந்தனர். இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திப் பிரதமரின் செயலாளர் பிரதீப்சபுதந்திரி, பிரதமரின் மேலதிக செயலாளர் பி.டபிள்யூ.ஜி.சி.சாகரிகா போகஹவத்த, மற்றும் வெளிவிவகார அமைச்சின் தெற்காசியா மற்றும் சார்க் பிரிவுப் பணிப்பாளர் நாயகம் நிலுக கதுருகமுவ ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

## எலிக்காய்ச்சல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டன.

அவர்கள் கிராமங்கள் தோறும் சென்று இந்த விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்தனர். நோய், அதற்கான அறிகுறிகள், காய்ச்சல் ஏற்பட்டால் உடன் செய்யவேண்டியது ஆகிய விவரங்கள் அடங்கிய துண்டறிக்கைகளையும் அவர்கள் வழங்கினர். பருத்துத்துறை நகரசபை பகுதியிலும் பொது சுகாதார பரிசோதகர்களால் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதேவேளை, பருத்தித்துறை பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள எலிக்காய்ச்சல் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக தேசிய தொற்றுநோய் பிரிவின் அதிகாரிகள் நேற்று இரண்டாவது நாளாகவும் நோய்த் தொற்றுப் பகுதிகளில் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

## பங்குச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொத்தப் புரள்வு 6.1 பில்லியன்களாகப் பதிவாகி உள்ளதாகக் கொழும்புப் பங்குச் சந்தை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் வரலாற்றில் முதற்தடவையாகக் கொழும்புப் பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் விலைச் சுட்டெண் 14,000 புள்ளிகளைக் கடந்து சாதனை படைத்திருந்தது

## மேலும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமே. அதேபோன்று நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலகவுக்கும் கலாநிதி பட்டம் இல்லை எனக் கூறப்படுகிறது. மின்சக்தி அமைச்சர் புண்ணிய ஸ்ரீ குமார ஜயக்கொடிக்கும் உயர் கல்வி தகைமை பட்டம் எதுவும் இல்லை எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு பொய் கூறிய ஒவ்வொருவரதும் பட்டங்களும் இப்போது நாடாளுமன்ற இணையத் தளத்திலிருந்து நீக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஹர்ஷண சூரியப்பெரும, அனில் கயந்த, பிமல் ரத்நாயக்க மற்றும் எரங்க குணசேகர போன்றோரும் இந்த நிலைமையிலா இருக்கின்றனர் என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ளது தனிப்பட்ட நபர்கள் குறித்த பிரச்சினையல்ல. இவர்கள் ஏன் மக்களுக்கு பொய் கூறினார்கள் என்பதுதான் பிரச்சினை. அமைச்சரவைப் பேச்சாளரிடம் இது தொடர்பில் கூறியபோது நாம் இதனைப் பெரிதாக எண்ணவில்லை என்று கூறுகின்றார். மக்கள் நேரடியாகக் கேள்வியெழுப்பும் இவ்வாறான விடயங்களை ஆளும்தரப்பால் உதாசீனப்படுத்த முடியாது.

அரசியலில் கல்வித் தகைமையை ஒரு பிரச்சினையாகக் காண்பித்த தேசிய மக்கள் சக்தி இதற்கு நிச்சயம் பதிலளித்தே ஆகவேண்டும் என்றார்.

## பொலிஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொத்துக்களைப் பலாத்காரமாக கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் படி, முறைப்பாட்டாளருக்கு ஒருதலைப்பட்சமாக அந்தச் சொத்துக்களைத் திருப்பி வழங்கிய குற்றச்சாட்டின் பேரில் அவர் அண்மையில் கைது செய்யப்பட்டார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேகநபரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை கைது செய்து இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர்.

2023 ஒகஸ்ட் 2 குருவிட்ட இரத்தினக்கல் வர்த்தகர் ஒருவர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு வந்து தனது சுமார் 14 கோடி ரூபா பெறுமதியான சொத்து பலாத்காரமாக அபகரிக்கப்பட்டதாக இந்த முறைப்பாட்டைச் செய்திருந்தார்.

சந்தேகத்திற்குரிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருதலைப்பட்சமாக செயற்பட்டார் என்று குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பொது முறைப்பாடு பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் படி, உதவி பொலிஸ் அத்தியட்சகர் கைது செய்யப்பட்டு இரத்தினபுரி நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது, உரிய விசாரணையின்றி சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக ஜனாதிபதியின் சட்டத்தரணி நளிந்த இந்திரதிஸ்ஸ திறந்த நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

## முழு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் கூட்டணியின் பங்காளி கட்சிகளுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் அடிப்படையில் அவர்களுடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமைய தேசியப் பட்டியல் நியமனங்கள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸ் தலைவர் ரவுப் ஹக்கீம் நீதிமன்றம் செல்ல முன்னரே தீர்மானம் எடுக்கப்பட்டுவிட்டது.

எமக்குக் கிடைத்த 4 தேசிய பட்டியல் ஆசனங்களைக் கொண்டு அனைவரையும் திருப்திப்படுத்த முடியாது. கோரிக்கை விடுக்கும் அனைவருக்கும் வாய்ப்பளிக்கவும் முடியாது.

ஹக்கீம் நீதிமன்றம் சென்றாலும், சென்றிருக்காவிட்டாலும் அவருடன் எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கமையவே நாம் தீர்மானம் எடுத்திருப்போம். எனவே யதார்த்தத்தை உணர்ந்து எவரும் எம்முடன் அல்லது கட்சித் தலைமைத்துவத்துடன் கோபமடைய மாட்டார்கள் என்று நம்புகின்றோம்.

இந்த விடயத்துக்காக எவரும் கட்சியை விட்டுச்செல்வார்கள் என நாம் எண்ணவில்லை. கட்சியின் மூத்த உறுப்பினர்கள் என்ற ரீதியில் அனைவரும் சிந்தித்துச் செயற்படுவார்கள்.

எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு அடுத்து வரும் தேர்தலில்களில் வெற்றி பெறுவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வோம்.

சபாநாயகருக்குஎதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும். முழு நாட்டுக்கும் இந்த ஆளும்தரப்பு நம்பிக்கைத் துரோகம் இழைத்திருக்கிறது. அதற்கமைய மக்களுக்காக நாம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# சிறந்த விவசாயிகள், பண்ணையாளர்களுக்கு வட மாகாண விவசாய அமைச்சு கௌரவிப்பு

வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் வடமாகாணத்தில் சிறந்த விவசாயிகள் மற்றும் சிறந்த பண்ணையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண விவசாயப்பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம் கலந்து கொண்டார்.

மேற்படி நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சிற்கு கீழுள்ள திணைக்களங்களின் பணிப்பாளர்கள், யாழ் பல்கலைக்கழக விவசாய பீட பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன், ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த விவசாய மற்றும் கால் நடை, நீர்ப்பாசன திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

வடமாகாண விவசாய அமைச்சின் அறுவடை இதழும் வெளியீட்டு வைக்கப்பட்டது.

ஐந்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய சிறந்த விவசாயிகள் மற்றும் பண்ணையாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (113)







# பாடசாலைக்குத் தளபாடங்கள்

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் (முன்னைய அரசாங்கத்தின்) பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, புத்தளம் - 05 ஆம் வட்டார அமைப்பாளர் எம்.எம்.முர்ஷித்தின் வேண்டுகோளின் பேரில், புத்தளம் இஸ்லாஹிய்யா பெண்கள் அரபுக் கல்லூரிக்கு, 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியில், சிமாட் கிளாஸ் வகுப்பறைகளுக்கான தளபாடங்கள் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில், மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் புத்தளத்தில் போட்டியிட்ட வேட்பாளர் எம்.எச்.முஹம்மத், 07ஆம் வட்டார அமைப்பாளர் ரஸீன் ஆசிரியர், இஸ்லாஹிய்யா அரபுக் கல்லூரியின் முகாமைத்துவ சபைத் தலைவர் அஜ்மல், செயலாளர் பொறியியலாளர் மரைக்கார், பொருளாளர் சட்டத்தரணி பாரிஸ், நிர்வாக சபை உறுப்பினர் ஹாபி உட்பட நிர்வாக உறுப்பினர்களும் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.





வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# ஊடகவியலாளர் பைஷலுக்கு ‘சாஹித்ய மாகாண விருது’

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நாடாத்தப்பட்ட 2024 ஆம் ஆண்டு மாகாண இலக்கிய விழாவில் சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் சமூக விஞ்ஞானம் (ஆயுர்வேதம்) ’சாஹித்ய மாகாண விருது’ வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க தலைமையில் புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இவ்விழாவின்போது கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீலினால் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம், சான்றிதழ் மற்றும் காசோலை போன்றன வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பொதுமக்களுக்கு நோய் பற்றிய தெளிவையும், அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வுகளை வழங்கும் நோக்கில், துறைசார் வைத்திய நிபுணர்கள் ஊடாக பெற்றுக்கொண்ட மருத்துவ ஆக்கங்களை ’நலன் தரும் மருத்துவம்’ என்ற பெயரில்,

சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தொகுத்து வெளியீடு செய்திருந்தார்.

அந்நூல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்பட்டு ’சமூக விஞ்ஞானம்’ (ஆயுள்வேதம்) ’சாஹித்ய மாகாண விருதை வழங்கி கௌரவித்தனர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் சரவணமுத்து நவநீதனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இவ்விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாகவும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க ஆகியோருடன் கௌரவ அதிதிகளாக அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





இவ்விழாவில், கடந்த மூன்று வருடங்களுக்குள் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கான விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# டீ.எஸ்.ஐயின் புத்தளம் கிளை மறுசீரமைக்கப்பட்டு திறப்பு

(சியாஜ்)

புத்தளத்தில் நீண்ட நாளகளாக தமது வாடிக்கையாளர்களுக்கு சேவையை வழங்கி வந்த டீ.எஸ்.ஐ நிறுவனத்தின் கிளை அதனை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் புணர்நிர்மானம் செய்து புத்தளத்தில் உத்தியோக பூர்வமாக திறந்து வைத்துள்ளது.

டீ.எஸ்.ஐ நிறுவனத்தின் அகில இலங்கை சந்தைப்படுத்தல் முகாமையாளர் என். வீரவர்தன தலைமையில் நடைபெற்ற நிகழ்வின்





டி.எஸ்.ஐ நிறுவனத்தின் கம்பஹா- புத்தளம் கண்காணிப்பு அதிகாரி ரங்க மற்றும் புத்தளம் காட்சியறை முகாமையாளர் என்டன் உள்ளிட்ட சிலாபம், வென்னப்புவ முகாமையாளர்கள், வாடிக்கையாளர்கள் என அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.12.2024இல் வெளியிடப்பெற்றது